பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2051 | தை 14 செவ்வாய்க்கிழமை 28.01.2020 | கதிர் 84

**இனி இது ரகசியம் அல்ல!**

முன்னாள் வடக்கு மாகாண முதல்வருக்கு அந்தப் பதவியின் விட்டகுறை தொட்டகுறையாகத் தொடரும் ஒரு விடயத்தை அவரின் 'காலைச் சுற்றிய பாம்பு' என்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்த விடயம் இன்று கொழும்பில் மேன்முறை பக்கம் 02

# ஐ.தே.கவால் எனக்கு நேர்ந்த கதி கோட்டாவுக்கும் ஏற்படக்கூடாது

## பட்டறிவைப் பகிர்கிறார் மைத்திரி



கொழும்பு, ஜன. 28

ஜனாதிபதியாக தான் பதவி வகித்தபோது, தனக்கு ஏற்பட்ட நிலைமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே, அவருக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலனறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். பக்கம் 03

## கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தல்:

### இரு கடற்படை அதிகாரிகளுக்கு எதிரான விசாரணையை இடைநிறுத்த பரிந்துரை

கொழும்பு, ஜன. 28

11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட பக்கம் 03

## சீன வர்த்தகக் கப்பலில் பணியாற்றும் இலங்கையர்களுக்கு திடீர்க் காய்ச்சல்

கொழும்பு, ஜன. 25

சீனாவிலிருந்து எகிப்து நோக்கிப் பயணிக்கும் வர்த்தகக் கப்பலொன்றில்பணியாற்றும் 6 இலங்கையர்களுக்குகாய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கையின் வர்த்தகக் பக்கம் 03

## எதிராளிகள் ஒன்றிணைந்த தரண்ஜித்தின் பிரியாவிடை



கொழும்பு, ஜன. 28

இலங்கைக்கான இந்தியத் தூதுவராகச் செயற்பட்ட தரண்ஜித் பக்கம் 03

## தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தேசியக் கட்சி மலரவேண்டும்!

### சபா குகதாஸ் கோரிக்கை



கொழும்பு, ஜன. 28

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு தேசியக் கட்சியாக மாறுகின்ற போதுதான் எதிர்வரும் காலங்களில் ஏற்படப்போகும் சவால்களுக்கு முகங்கொடுக்க முடியுமென வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ் பக்கம் 03

## வடக்கு மாகாண மக்கள் அஞ்சத் தேவையில்லை



யாழ்ப்பாணம், ஜன. 28

சீனாவில்பரவிவரும்கொரோனா வைரஸ் தொடர்பில் வடக்கு மக்கள் தேவையற்று அச்சமடையத் தேவையில்லை என்று மாகாண தொற்றுநோய் பக்கம் 02

## கே.கே.எஸ். சிமெந்து ஆலையை மீள ஆரம்பிக்க 300 ஏக்கரில் நிலம்

### கைதொழில் அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 28

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்குச் சுமார் 300 ஏக்கர் மாற்று நிலங்கள் அடையாளம் காணப்பட்டு, அவை தொடர்பான சாத்திய அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

இந்தத் தகவலைக் கைதொழில், பக்கம் 03

## மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய வகையான காய்ச்சல்!

மட்டக்களப்பு, ஜன. 28

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு வகையான காய்ச்சல் பரவி வருவதனால் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் உள்ள கல்குடா, மட்டக்களப்பு மத்தி, பட்டிருப்பு, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பாடசாலைகளில் கல்வியைத் தொடர்கின்ற மாணவர்களின் வரவிலே இவ்வாறு சிறு வீழ்ச்சி பக்கம் 03

## மக்கள் பீதியடையவேண்டாம்!

கொழும்பு, ஜன. 28

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவாமல் கட்டுப்படுத்த தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், நாட்டு மக்கள் பீதி அடைய வேண்டாம் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் கேட்டுள்ளது.

கொழும்பு வைத்தியசாலையில் சீன நாட்டுப் பெண் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியமை கண்டறியப்பட்டது.

இந்த அறிவிப்பை அடுத்தே சுகாதார அமைச்சின் சுகாதார பக்கம் 03

## ஐ.தே.கவினருக்கு தோல்விப் பயம்!

### நாமல் ராஜபக்ஷ கிண்டல்



கொழும்பு, ஜன. 28

தோல்விப் பயம் வந்துவிட்ட காரணத்தினாலேயே, ஐக்கிய தேசியக் கட்சியினர் தொடர்ந்தும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை விமர்சித்து வருகிறார்கள் என்று ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பக்கம் 03

## இலங்கையிலும் 'கொரோனா' சீனப்பெண்ணே அடையாளம்

### கட்டுநாயக்க விமான நிலையத்தில் இன்றிலிருந்து விசேட சோதனைகள்

கொழும்பு, ஜன. 28

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான முதலாவது நோயாளி நேற்று மாலை அடையாளம் காணப்பட்டுள்ளார் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அங்கொடையிலுள்ள தொற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த 43 பக்கம் 03

# கோடீஸ்வரன் எம்.பியும் காணிகள் அபகரித்தார்

## கருணா குற்றச்சாட்டு

அம்பாறை, ஜன. 28

பழைய போராளிகள் அனைவரையும் கருணா அம்மான் திரட்டுகிறார் என்று போராளிகளைக் காட்டிக்கொடுக்கும் செயற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் ஈடுபட்டுள்ளார் என விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா) குற்றச்சாட்டியுள்ளார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை கோரக்கோவில் உதயபுரம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுகிழமை சமூக சேவகர் வெ.மோகன் தலைமையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

முஸ்லிம் அரசியல்வாதிகள் கருணா அம்மான் என்றால் நட்பாகத்தான் இருக்கின்றனர். அலி சாகிர் மௌலானா என் உயிர் நண்பர். அரசியல் கொள்கை வேறு நட்பு வேறு. இதுதான் நாகரீக அரசியல் .

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான் குரோத அரசியலை வளர்க்கின்றனர். கோடீஸ்வரன் அண்மையில் விட்ட அறிக்கை பாரதூரமான ஒரு அறிக்கை. பழைய போராளிகள் அனைவரையும் கருணா அம்மான் திரட்டுகிறார் என்றால் அது பாரதூரமான செயற்பாடு. அது காட்டிக்கொடுக்கும் அரசியல். அதற்கு நான் விடுவேனா படைத்தளபதியாக இருந்த நான் வெளியில் இருக்கும்போதும் போராளிகளை உள்ளே வைக்கப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டேன். போராளிகளை கைது செய்து உள்ளே வைக்க வேண்டுமென்றால் என்னைத்தானே முதலில் கைது செய்து உள்ளே வைக்கவேண்டும். நான் துணிந்து வெளியில் நிற்கின்றேன் என்றால் ஏனைய போராளிகளை உள்ளே வைக்க அனுமதிப்பேனா? ஒரு காலமும் போராளிகளை விட்டுக் கொடுக்க மாட்டேன்.

நாடாளுமன்றத்துக்குச் சென்று வெறுமனே பேசிக் கொண்டிருப்பவர்களை அனுப்புவதால் பொதுமக்களுக்கு என்ன பயன். அவர்கள் அங்கு சுகபோகங்களை அனுபவித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களைநாடாளுமன்றத்துக்கு அனுப்புவதால்எமது மக்களுக்கு நன்மை வருமா? என்றார். (ஐ)

# ஊடகவியலாளர்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நேற்றுப் போராட்டம்




வவுனியாவில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் தமது உறவுகளின் உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு கோரியும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரியும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு முன்பாக கடந்த 1073 நாட்களாக போராடிவரும் காணாமல் ஆக்கபட்டவர்களின் உறவினர்களாலேயே குறித்த ஆர்பாட்டம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

பத்திரிகை சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் முதுகெலும்பாகும், ஒடுக்கப்பட்ட பத்திரிகை சுதந்திரம் இராணுவ ஆட்சி அல்லது சர்வாதிகாரத்திற்கு வழி வகுக்கும் என்று எழுதப்பட்டிருந்த பதாகையை தாங்கியவாறு, காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே எங்கே பிள்ளைகள் எங்கே, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து போன்ற கோசங்களை எழுப்பியவாறு இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# சிவாஜிக்கு பிடியாணை!

முல்லைத்தீவு, ஜன. 28

அரசசொத்துக்களிற்கு சேதம் விளைவித்த வழக்கில், தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் காணி சுவீகரிப்புக்கு முன்னோடியாக, நில அளவைத் திணைக்களம் அளவீட்டுப் பணியை முன்னெடுக்கத் தயாரானபோது, அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில்எம்.கே.சிவாஜிலிங்கம், து.ரவிகரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

அரச சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தனர் என அவர்கள் மீது முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முல்லைத்தீவுப்பொலிஸார்வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கு விசாரணை நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றது. நேற்றைய வழக்கு விசாரணையின் போதும், எம்.கே.சிவாஜிலிங்கம் மன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. இதையடுத்து, சிவாஜிலிங்கத்துக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

வழக்கு எதிர்வரும் மே 18ஆம் திகதி வரை ஒத்திவைக்கப் பட்டது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகின்றது.

அது குறித்துப் பார்ப்பதற்கு முன்னர் இந்த விடயம் பற்றிய ஒரு சிறிய 'ப்ளாஷ் பாக்' (பின்நோக்கிய பார்வை) வாசகர்களுக்கு அவசியமானது. அப்போதுதான் விடயத்தைப் புரிந்து கொள்ளமுடியும்.

வடக்கு மாகாண சபையில் உள்கட்சி சர்ச்சை உச்சம் பெற்றிருந்தபோது தனது சக அமைச்சர்கள் நால்வரையும் வீட்டுக்கு அனுப்ப முயன்றார் நீதியரசர் விக்னேஸ்வரன். போக்குவரத்து அமைச்சராக இருந்த பா.டெனீஸ்வரன் தாம் எந்தத் தவறுமோ, ஊழலுமோ செய்யவில்லை எனத் தெரிவித்துப் பதவி விலகவோ, இராஜினாமாச் செய்யவோ மறுத்து நின்றார். அதையடுத்து அவரைத் தாம் பதவி விலக்குகின்றார் என்று தெரிவிக்கும் கடிதம் ஒன்றை டெனீஸ்வரனுக்குத் தாமே அனுப்பிவிட்டு, அவரது அமைச்சுப் பொறுப்புக்களை அவரிடம் இருந்து பறித்தார் விக்கி. அவற்றைப் பின்னர் தாமும் அனந்தி சசிதரன், சிவநேசன் ஆகியோரோடும் பகிர்ந்து கொண்டார் விக்கி .

சட்டரீதியாகத் தம்மைப் பதவியில் நியமித்த ஆளுநரே தம்மைப் பதவி விலக்க முடியும் என்றும், முதல்வர் அவரது கடிதம் மூலம் தம்மை பதவி நீக்கினார் என்று கூறுவது சட்ட ரீதியாகத் தவறானது என்றும் தெரிவித்து நீதிமன்றை அணுகினார் டெனீஸ்.

அவரது வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் டெனீஸை உடனடியாகப் பழைய அமைச்சர் பதவியில் தொடர இடமளிக்கும்படியும் அதைத் தடை செய்யாமல் இருக்குமாறும் முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கும் டெனீஸின் அமைச்சுப் பொறுப்புகளைப் பகிர்ந்து பெற்றுக்கொண்டவர்கள் எனக் கூறப்பட்ட அனந்தி சசிதரன், சிவநேசன் ஆகியோருக்கும் இடைக்காலத் தடை உத்தரவு மூலம் பணித்தது.

ஆனால் அப்படி டெனீஸ் அமைச்சர் பதவியில் தொடர அனுமதிக்கப்படவேயில்லை. அது மட்டுமல்லாமல், கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அந்த இடைகாலத் தடை உத்தரவைப் பின்பற்றவே தேவையில்லை என்ற சாரப்பட மாகாண சபையிலும் முதல்வர் விக்கி உரையாற்றியிருந்தார். அந்த உரைபோன்ற ஆவணங்களுடன் விக்கி, அனந்தி, சிவநேசன் ஆகியோருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார் டெனீஸ்.

நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவை நடைமுறைப்படுத்த மறுத்தமை மூலம் இம்மூவரும் நீதிமன்றத்தை அவமதித்துள்ளனர் என்பது டெனீஸ் தரப்பு வாதம். அந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கைப் பரீசீலனைக்கு ஏற்ற மேன்முறையீட்டு நீதிமன்றம் அதே சமயம் மூல வழக்கையும் விசாரித்து அமைச்சர் டெனீஸைப் பதவி நீக்கிய முறைமை சட்ட ரீதியாகத் தவறு என்று தீர்ப்பளித்துள்ளது.

அதனால் சுமார் ஒரு வருட காலம் அமைச்சுப் பதவியை வகிக்க முடியாமல் போனமையால் டெனீஸ்க்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு – நஷ்டஈடு, சம்பள – வேதன– அலவன்ஸ்–இழப்புகள் யாவற்றுக்கும் உரிய கொடுப்பனவுகளை மாகாண சபை கொடுக்க வேண்டியிருக்கும். இதற்கான கோரிக்கையை டெனீஸ் இன்னும் மாகாண சபையிடம் முன்வைக்கவில்லை. நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் அதை அவர் முன்வைக்கும் போது, அவரின் இடத்துக்கு அந்தக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொண்டுள்ள அனந்தி, சிவநேசன் போன்றோரிடமிருந்தும் அப்போதைய முதல்வர் விக்கியிடமிருந்தும் அவற்றை மீளப்பெறுவதற்கு மாகாண சபை முயற்சிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போது நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் மீது இன்றும் வெள்ளியன்றும் விசாரணை நடத்தித் தீர்ப்பளிக்க நீதிமன்றம் திகதியிட்டுள்ளது. இன்றைய விசாரணையில் சாட்சியம் அளிக்க வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர், மாகாண அவையின் செயலாளர், ஆளுநரின் செயலாளர் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

திட்டமிட்டபடி இன்று விசாரணை ஆரம்பித்து வெள்ளியன்றும் தொடருமேயானால் அதற்குப் பின்னர் இரண்டு தரப்புகளும் எழுத்து மூல வாதங்களைச் சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்கித் தீர்ப்பை நீதிமன்றம் தள்ளிவைக்கும். பெரும்பாலும் மார்ச் கடைசியிலோ, ஏப்ரலிலோ – பொதுத் தேர்தல் சூடு பிடிக்கும் சமயத்தில் – நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் தீர்ப்பு வெளிவரச் சாத்தியம் உண்டு.

நீதியரசர் விக்கி தரப்பில் ஒரு சிலர் ஒரு வாதத்தை முன்வைக்கின்றார்.

தீர்ப்பு அவருக்குச் சாதகமானால் அது அரசியல் ரீதியில் அவருக்குப் 'பிளஸ் பொயிண்ட்' ஆகும். மாறி. பாதகமானால் அதுவும் அரசியல் ரீதியில் அவருக்குச் சாதகமான அனு தாப அலையை ஏற்படுத்தும் என்பதுதான் அந்த வாதம்.

தப்பித் தவறி, பாதகமான தீர்ப்பு விக்னேஸ்வரன் தேர்தலில் போட்டியிடும் தகைமையீனத்தை ஏற்படுத்தும் விதமாக வந்துவிட்டால் அதனால் கிளம்பும் அனுதாப அலையும் விக்கிக்கு உதவுமா? விக்கிக்கு உதவாவிட்டாலும் விக்கி தரப்புக்கு உதவும் என அவரது தரப்பினர் பதிலளிக்கக்கூடும்.

எது, எப்படி என்றாலும் விடயம் காலைச் சுற்றிய பாம்புதான். அது கொத்தாமல், அதைக் கழற்றி, விலக்கிக் கொள்வது விக்கி தரப்பின் சமார்த்தியத்தைப் பொறுத்தது.

தேர்தல் சமயத்தல் இந்தத் தீர்ப்பு வராமல் சமாளிக்க வேண்டுமானால் இப்போது – இன்றும் வெள்ளியன்றும் – இந்த வழக்கு விசாரணை நடைபெறாமல் தள்ளிப் போட்டால் வாய்ப்புண்டு. வழக்கில் எதிர் மனுதாரர்கள் தரப்பில் மருத்துவச் சான்றிதழ் போன்ற ஏதேனும் ஆவணத்தை சமர்ப்பித்து, விசாரணைத் திகதியை ஒத்திவைக்கும்படி இன்று கோரப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

– மின்னல்–

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்புப் பிரிவின் அதிகாரி மருத்துவர் எஸ்.சிவ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

இலங்கையைப் பொறுத்தவரை சீனாவுடன் தொடர்புகள் காணப்படினும் கொரோனா வைரஸ் தொற்றுள்ள பிரதேசமாகக் காணப்படவில்லை. எனினும் ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் இது தொடர்பான தப்பான விடயங்கள் வெளியிடப்பட்டு மக்களிடையே தேவையற்ற பயமும் குழப்பங்களும் ஏற்படலாம் என்பதனால் இந்தத் தகவல்களை பொதுமக்களின் நன்மை கருதித் தெரிவிக்கின்றோம்.

தற்போது சீனாவில் குறிப்பிட்டதொரு மாகாணத்தில் சுமார் 3 ஆயிரம் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களில் 80 நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

எனினும் ஏனைய நாடுகளில் சீனா போன்று கொரோனா வைரஸ் நிரந்தரமான தொற்றுக் காணப்படவில்லை. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுக ளில் சுகாதார ஊழியர்களிடம் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகள் காணப்பட்டுள்ளே போதும் சீனா போன்று ஆபத்துக்கள் இல்லை.

இலங்கையிலும் கொரோனா தொற்றுக்குள்ளான நோயாளர்கள் இனங்காணப்பட்டதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியபோதும் இதுவரை அந்த வைரஸ் தொற்றுக்குள்ளான எவருமே இனங்காணப்படவில்லை.

4 நோயாளர்களின் மாதிரிகள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டு அவர்களுக்கு ஏற்பட்டது கொரோனா வைரஸ் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் இந்தவிடயத்தில் தேவையற்று அச்சம் கொள்ளத் தேவையில்லை.

கொரோனா வைரஸ் தொற்று சாதாரணமாக தடிமன், காய்ச்சல் ஏற்படுவது போன்றத் தொற்றுத்தான். ஆனால் 2019ஆம் ஆண்டு பிற்பகுதியில் சீனாவில் புதிய வகை கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. அதன்மூலம் தான் தற்போது காணப்படுகின்ற நோய்நிலைமை ஏற்படுகிறது.

இது தொடர்பில் தற்போது ஆராய்ச்சிகளை சீன அரசும் உலக சுகாதார நிறுவனமும் மேற்கொண்டு வருகின்றன. அதன் ஊடாக மேலதிக தகவல்களை பொதுமக்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கையில் சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு உரிய தகவல்களை வழங்கும். எனினும் நாம் சில தற்காப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதலாக சுற்றுலா பயணிகள் கூடும் இடங்களில் இதற்கான தற்காப்பு நடவடிக்கைகள் அவசியமாகும்.

சவற்காரமிட்டு கைகழுவுதல் மிகவும் முக்கியமானது. எத்தகைய தொற்று நோயாக இருந்தாலும் சவற்காரமிட்டு கைகளைக் கழுவுவதன் மூலம் 90 வீதமாக நோய் பரவாமல் தடுக்க முடியும்.

பொதுவாக வைரஸ் தொற்றுக்களைத் தடுக்கும் உணவு வகைகள் உள்ளன. மரக்கறிகள், பழங்கள்(புளிப்பான பழங்கள்) போன்றவற்றை உணவுடன் சேர்த்துக் கொள்வதன்மூலம் கொரோனா வைரஸ் தொற்றைக் குறைக்கக் கூடியதாக இருக்கும்.

அத்துடன், தேவையற்ற பயணங்களை தவிர்க்கவேண்டும். குறிப்பாக கட்டுநாயக்க விமான நிலையம், சுற்றுலா பயணிகள் அதிகம் கூடும் இடங்களைத் தவிர்த்துக் கொள்வது உதவியாக இருக்கும்.

சுகாதார அமைச்சு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைரஸ் தொற்று நோயாளர்களை இனங்கண்டு கொள்வதற்கான நவடிக்கைகளை முன்னெடுத்து உள்ளதால் நாம் தேவையற்ற வகையில் அச்சமடையத் தேவையில்லை– என்றார். (ஐ)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கொமடோர் டி.கே.பி.தசநாயக்க ஆகியோருக்கு எதிரான விசாரணையை இடைநிறுத்துமாறு சட்ட மா அதிபருக்கு ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை வழங்கியுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் காரணமாகப் பதவி துறந்த அல்லது நடவடிக்கைகளுக்கு உள்பட்ட அரச ஊழியர்கள், அரச கூட்டுத் தாபனங்கள் மற்றும் துணை அரச நிறுவனங்களின் பணியாளர்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவே இந்தப் பரிந்துரையை சட்டமா அதிபருக்கு வழங்கியுள்ளது.

ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஜகத் பாலபெட்டபந்தி தலைமையில் இந்த ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இதன் செயலாளராக சட்டத்தரணி சுமுது கே.விக்கிரமாராச்சியை உள்ளார்.

2008 - 2009 காலப்பகுதியில் 11 தமிழ் இளைஞர்கள் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவத்துக்கு உதவியாகவும் உடந்தையாகவும் இருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட மற்றும் கொமடோர் டி.கே.பி.தசநாயக்க ஆகியோருக்கு எதிராகக் கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் கடற்படை அதிகாரிகள், சிப்பாய்கள் உள்பட 14 பேர் எதிரிகளாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

## இலங்கையிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதுடைய சீன நாட்டுப் பெண்ணொருவரே 'கொரோனா' வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் சீனாவை வதைத்து வருகின்ற நிலையில், அந்த நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் பயணிகளைக் கட்டுநாயக்க விமான நிலையத்தின் விசேட வெளியேறும் பிரிவினூடாகவெளியேற்றுவதற்கு நேற்றிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் விசேட மருத்துவப் பிரிவினூடாகப் பயணிகள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் விமான நிலையத்தின் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விமானநிலையத்தின் அனைத்து ஊழியர்களையும் முகக்கவசத்தை அணிந்துகொள்ளுமாறும் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

### பலியானோர் எண்ணிக்கை 80 ஆக உயர்வு

சீனாவில் அசுர வேகத்தில் பரவி வரும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்குப் பலியானோர் எண்ணிக்கை 80 ஆக உயர்வடைந்துள்ளது.

சீனாவின் ஹுபெய் மாகாண தலைநகரான உகான் நகரில் வசித்து வரும் மக்களை கடந்த மாத இறுதியில் கொரோனா எனப்படும் கொடிய வைரஸ் தாக்கியது.

இந்த வைரஸால் புதுவித நிமோனியா நோய்க்கு ஆட்பட்ட அவர்கள் அடுத்தடுத்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். பின்னர் இந்த நோய் தீவிரமடைந்து உயிரிழப்புகள் ஏற்பட்டன.

இந்த வைரஸ் சீனாவின் பிற பகுதிகளுக்கும் வேகமாகப் பரவி வருகின்றது. இந்த வைரஸுக்கு இதுவரை மருந்தோ, தடுப்பூசியோ இதுவரை கண்டுபிடிக்கப்படாததால் நோயின் வீரியத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

சீனாவின் தலைநகர் பீஜிங், ஷாங்காய் உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்கும், ஹுபெய்யைச் சுற்றியுள்ள மாகாணங்களிலும் பெருந்த சேதங்களை கொரோனா வைரஸ் ஏற்படுத்தி வருகின்றது.

சீனா முழுவதும் கொரோனா வைரசுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை நேற்று 80 ஆக ஆகஉயர்வடைந்துள்ளது. அங்கு 2,684 பேர் இந்த வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

அதில் 1,975 பேரை வைரஸ் தாக்கி இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தீவிர சிகிச்சையில் இருக்கும் அவர்களில் 324 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

அசுர வேகத்தில் பரவி வரும் கொரோனா வைரஸுக்கு மருந்து மற்றும் தடுப்பூசி கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் சீன விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

## ஐ.தே.கவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

மகாவலி அபிவிருத்தி குறித்து இங்கு பலருக்குத் தெரியும். விவசாயத்தை ஊக்குவிக்கவே இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் மின்சார உற்பத்திற்காக இந்தத் திட்டம் பயன்படுத்தப்பட்டது. 30 வருடங்களில் செய்ய வேண்டிய இந்தத் திட்டம் 7 வருடங்களில் செய்து முடிக்கப்பட்டது. இதேபோன்று நான்கு வருடங்களில் மேற்கொள்ளவேண்டிய மொரகாஹந்த திட்டத்தை நான் 3 வருடங்களில் செய்து முடித்தேன். எமது செயற்பாடுகளை வேகப்படுத்தும்போதுதான் அபிவிருத்திகளையும் வேகப்படுத்த முடியும். இவ்வாறான அபிவிருத்திகளுக்காக நாம் கோடிக்கணக்கான நிதியைச் செலவழித்துள்ளோம். எனினும், மக்கள் இதுதொடர்பாக எல்லாம் கதைப்பதில்லை.

மூளை சரியாக வேலை செய்யாதவர்கள்தான், என்னைப் பார்த்து என்ன செய்தீர்கள் என்று கேட்கிறார்கள். இதுகுறித்து நான் என்றும் கவலையடையப் போவதில்லை. புத்தருக்கே கல் வீசிய இந்த உலகத்தில் எமக்கு இவ்வாறான விமர்சனங்கள் வருவது எல்லாம் பெரிய விடயமல்ல. இப்படியான சமூகத்தில்தான் நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். இதனை மாற்றியமைத்து புதிய அரசுடன் இணைந்து புதிய பயணத்தை மேற்கொள்ள வேண்டும். தனது அதிகாரங்களைத் தானே குறைத்த ஜனாதிபதியாக நான் தான் காணப்படுகிறேன். உலகில் எவரேனும் இப்படியான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளாரா? இல்லை.

எமது நாட்டின் 19 திருத்தச் சட்டங்களில் 12 திருத்தச்சட்டங்கள் ஜனாதிபதிக்கான அதிகாரத்தை அதிகரிக்கும் வகையில் தான் கொண்டுவரப்பட்டன. இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ஜனாதிபதிக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை கிடையாது. இதனால், அவருக்கு எந்தவொரு செயற்பாடும் மேற்கொள்ள முடியாது. இதனால்தான் பொதுத் தேர்தலில் கூட்டணி அமைத்து களமிறங்கி, ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் புதிய அரசை அமைக்க தீர்மானித்துள்ளோம்.

எமது அரசில் பிரதமர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தமையால், என்னால் எதனையும் சுயாதீனமாக மேற்கொள்ள முடியாமல் போனது. எனக்கு நேர்ந்தமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டு விடக்கூடாது. இது தான் எனது பிரதான நோக்கமாகும். பிளவடையாமல் சக்தி மிக்க அரசொன்றை ஸ்தாபித்து பயணிக்க வேண்டும்-என்றார்.

## கே.கே.எஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வணிக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் இரண்டு பிரதான சிக்கல்கள் கண்டறியப்பட்டுள்ளன.

சுமார் 300 ஏக்கர் மாற்று நிலங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் சாத்திய அறிக்கை தயாரிக்கப்படுகிறது.

அத்துடன், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் தளபதியுடன் அமைச்சர் விமல் வீரவன்ஸ பேச்சு நடத்தியுள்ளார் என்று கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் செயலாளர் ஜே.ஏ. ரஞ்சித் தெரிவித்தார்.

இதேவேளை, வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் ஓடு மற்றும் செங்கல் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் அமைச்சு முன்னெடுத்துள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## ஐ.தே.கவினருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். பொலனறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 4 அறை வருடங்களில் என்ன நடந்தது என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்த காரணத்துக்காக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல்போனது.

பௌத்த மதகுருமார்கள் கைது செய்யப்பட்டார்கள். அடிப்படைவாதக் கட்சிகளின் பேச்சுக்குச் சோரம் போய், ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் தீவிரவாதிகளாக பார்க்கும் நிலைமை ஏற்பட்டது. மத்திய வங்கிப் பிணை முறி மோசடி இடம்பெற்றது. இப்படியான அனைவரும் தற்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் மேடையில் தான் உள்ளார்கள். இவர்களால் தான் நாட்டின் தேசிய பாதுகாப்பே இல்லாது போனது.

ஆனால், தற்போதும் பிரதமர் மஹிந்தவைத்தான் ஐக்கிய தேசியக் கட்சியினர் விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தோல்வியடைவோம் என்ற பயம் வந்துவிட்டது. இதனால்தான் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார்கள்-என்றார். (ஐ)

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேம்பாட்டுப் பணியகம் மக்களிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

சீனாவிலிருந்து வருகை தந்த 43 வயதுடைய பெண்ணுக்கே கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றுத் திங்கட்கிழமை மாலை கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

## சீன வர்த்தக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் சங்கத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சி.எம்.ஏ.சி.ஜி.எம். வூரல் எனும் கப்பலில் பணியாற்றும் இலங்கையர்களே காய்ச்சலுக்கு இலக்காகியுள்ளனர் என இலங்கை வர்த்தகர் சங்கத்தின் தலைவர் பாலித அத்துக்கோரள தெரிவித்துள்ளார். (ஐ)

## தமிழ்க் கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தலைமைகள் எல்லோரும் ஒன்றுபட்டு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை கடந்த 2004 ஆம் ஆண்டு எவ்வாறு பெற்றெடுத்தார்களோ அவ்வாறு கூட்டாக ஒன்றுபடவேண்டும்.

எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்கள் தென்னிலங்கையில் வருகின்ற சவால்களை ஜனநாயக ரீதியில் முறியடிக்கக் கூடியதாகவும் சர்வதேச ரீதியில் நாட்டின் பூகோள நலம் சார்ந்து பங்கெடுத்துக்கொண்டிருக்கும் நாடுகள், தமிழ் மக்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளக்கூடியவாறும் அமையவேண்டும். இன்னும் காலம் கடக்கவில்லை. தமிழ் கட்சிகள் அனைத்தும் மனம் விட்டுப் பேசி தமது போலிக் கௌரவங்களை விட்டு தமிழ் மக்களுடைய தேசிய நலன் சார்ந்து செயற்படவேண்டும்.

குறிப்பாக வடக்கு-கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைக்காக ஜனநாயக வழியில் தங்களுடைய பூரணப் பங்களிப்பை கொடுத்திருந்தார்கள். அது மாத்திரமின்றி விடுதலைப் போராட்டம் நடைபெற்றபோது பல ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் தங்களுடைய உயிர்களை தியாகம் செய்து இருக்கின்றார்கள். இவ்வாறு ஒரு விலை மதிப்பிட முடியாத போராட்டம் நடைபெற்றது. அந்த தியாகங்கள் பெறுமதியாக்கப்பட வேண்டும்-என்றார். (ஐ-07)

## எதிராளிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங் சந்துவின் பிரியா விடை நிகழ்வு நேற்று திங்கள்கிழமை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமரின் துணைவியார் ஷிராந்தி ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட மேலும் பல அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை ஏற்பட்டுள்ளது.

அம்பாறை கரையோரப் பிரதேசங்களிலும் இந்த வைரஸ் காய்ச்சல் காரணமாக மக்களின் இயல்புநிலை பாதிப்படைந்துள்ளது. கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில் உள்ளிட்ட வலயக் கல்வி அலுவலகப் பிரிவுகளின் கீழ் உள்ள பாடசாலைகளிலும் மாணவர் வரவில் வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது டெங்கு காய்ச்சலும் பலருக்கு ஏற்பட்டுள்ளது. அத்துடன் ஒருவித வைரஸ் காய்ச்சலும் பலருக்கு ஏற்பட்டுள்ளதால் மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை, மட்டக்களப்பு பொது வைத்தியசாலை, ஏறாவூர் வைத்தியசாலை, காத்தான்குடி வைத்தியசாலை ஆகியவற்றில் அதிகமான மாணவர்கள் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது பனியுடன் கூடிய காலநிலை தொடர்வதனால் காலநிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவே இவ்வாறு மாணவர்கள் பலரும் நோய்த்தாக்கத்திற்கு உட்பட்டுள்ளனர். அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை அஷ்ரப் வைத்தியசாலை, மாளிகைக்காடு வைத்தியசாலைகளில் மாணவர்கள் பலர் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. பனியுடன்கூடிய காலநிலையும் தொடர்கிறது. இதனால் இந்த தொற்றுக்காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது.மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளில் பலர் மருந்து பெற்றுச் செல்கின்றனர். மாணவர்கள் பலரை பெற்றோர் வைத்தியசாலைக்கு அழைத்து வருவதை காணக் கூடியதாக உள்ளது.

இருமல் மற்றும் சளியுடன் தொடரும் இந்தக் காய்ச்சல் 5 நாட்களுக்கு மேல் தொடர்வதாகவும் கண் எரிவு, தலையிடி, உடல் நோ போன்றவற்றால் பிள்ளைகள் அவதிப்படுவதாகவும் பெற்றோர் கூறுகின்றனர். பிள்ளைகளை பரிசோதிக்கும் வைத்தியர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இவ்வாறு காய்ச்சலினால் பீடிக்கப்படும் பிள்ளைகள் உணவு உட்கொள்வதில் ஆர்வம் செலுத்துவதில்லை. அவர்களது வாய்க்குள் கொப்புளங்கள் ஏற்பட்டு பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர்.

அரச வைத்தியசாலைகளில் நோயாளர்கள் அனுமதிக்கப்படும் அதேவேளை, தனியார் மருந்தகங்களிலும், வைத்தியசாலைகளிலும் மாணவர்கள் இரவு நேரங்களில் தங்கள் பெற்றோருடன் வந்து சிகிச்சை பெற்றுக் கொண்டு செல்கின்றனர்.

இதற்கிடையே பாடசாலைக் குள் வருகைதரும் பிரதேச டெங்கு கட்டுப்பாட்டுக் குழுவினர் புகை விசிறுகின்றனர். 14 நாட்கள் காலக் கெடுகொடுக்கப்பட்டு வருகின்றது. பாவிக்காத மலசலகூடங்களை அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## விவரத்தை மக்கள் முன்வையுங்கள்!

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்குவதற்காக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமது தரப்புக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைத் தாருங்கள் என்று பகிரங்கக் கோரிக்கையைத் தொடர்ந்து விடுத்து வருகின்றது புதிதாக அரசுக் கட்டுக்கு ஏறியிருக்கும் பொதுஜன பெரமுன தரப்பு.

நாட்டில் நீதித்துறை, தேர்தல்கள், பொலிஸ்துறை உட்பட பல அமைப்புக்களை நிறைவேற்று அதிகாரத்தின் – ஜனாதிபதியின் – பிடியிலிருந்து, விடுவித்து, அவற்றை சுயாதீனக் குழுக்களின் கீழ் செயற்பட வழி செய்திருப்பது இந்த 19ஆவது திருத்தம்தான்.

வெறும் இறப்பர் ஸ்டாம்ப் போல இதுவரை இருந்த பிரதமர் பதவிக்குச் சற்று அதிகாரத்தையும், நாடாளுமன்றத்துக்கு சுயாதீனத்தையும் வழங்கியதும் கூட இந்த 19 ஆவது திருத்தம்தான்.

இப்போது பிரதமராக இருக்கும் மஹிந்த ராஜபக்ஷ சில விடயங்களிலாவது அரசுக்குள் அதிகாரம் கொண்டு இயங்குகின்றார் என்றால் அதற்குப் பிரதான காரணமும் இந்த 19ஆவது திருத்தமே.

19ஆவது திருத்தத்தை நீக்கினால் பிரதமர் பதவியில் மஹிந்த ராஜபக்ஷ செல்லாக் காசாகி விடுவார் என்பது வெளிப்படையானது. அதனையே ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான ஹிருணிகா பிரேமச்சந்திரவும் வெளிப்படையாகக் கூறுவார்.

ஆகையினால், 19ஆவது திருத்தத்தை நீக்கும் முயற்சி ராஜபக்ஷக்கள் இடையே அண்ணன் – தம்பி மோதலைத் தீவிரமாக்கும் என்று ஹிருணிகா பிரேமச்சந்திரன் கூறுகின்றமை புறக்கணிக்கத்தக்க விடயமல்ல.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் – அதன் பிதாமகர் – மஹிந்த ராஜபக்ஷதான். அவரைச் சுற்றித்தான் – அவரது செல்வாக்கில்தான் – அக்கட்சியே குறுகிய காலத்தில் கட்டியெழுப்பப்பட்டது.

அரசியலில் முன்பின் ஈடுபட்டிராத தமது சகோதரரை ஜனாதிபதி வேட்பாளராக்கி அத் தேர்தலில் வெல்ல வைத்தவர் மஹிந்தவே.

இலங்கையை விட்டு வெளியேறி, சுமார் பத்து ஆண்டு காலம் அமெரிக்கப் பிரஜையாக வாழ்ந்த கோட்டபாய ராஜபக்ஷ இலங்கை மீண்டு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பணியாற்றவும், அதன் மூலம் புலிகளுக்கு எதிரான போரை வெற்றி கொள்ளவும் வழி சமைத்துக் கொடுத்து, வழிப்படுத்தியவர் மஹிந்த ராஜபக்ஷதான்.

தாம் பிரதமராகிக் கொண்டு, தம்பி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதிப் பதவி என்ற உயர் நிலையை அளித்தவரும் மஹிந்தர்தாம்.

இப்போது மஹிந்தருக்கு எஞ்சியிருக்கக் கூடிய அதிகாரங்களையும் வெட்டுவதற்கு வழி செய்யும் 19 ஆவது திருத்தம் பற்றிப் பேசப்படுகின்றது.

அந்த முயற்சியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே முன்னின்று முன்னெடுப்பாராயின், அது, தீட்டிய மரத்தில் கூர் பார்க்கின்ற துரோகமாகவே அமையும்.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால் 19ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்று பேசி வருபவர்களில் மஹிந்த ராஜபக்ஷவும் ஒருவர் என்பதுதான்.

ஆக, 19ஆவது திருத்தத்தை நீக்குவதல்ல விடயம். அந்த இடத்துக்கு என்ன கொண்டு வரப் போகின்றீர்கள்? முன்னர் இருந்த பழைய ஏற்பாடுகளைத்தானா என்பதே இப்போதைய பிரதான கேள்வியாகும்.

இந்தக் கேள்விக்கான பதில் சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து இன்னும் வெளிவரவில்லை. இப்போதைக்கு வெளிவருகின்றமைக்கும் சாத்தியங்கள் மிகக் குறைவு.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நீக்கப்படும்போது அந்த இடத்துக்கு மாற்றாக வரப் போகின்ற ஏற்பாடுகள் யாது என்பது தொடர்பில் தங்கள் திட்டங்களை – எதிர்பார்ப்புகளை – யோசனைகளை – ஆளும் தரப்புகள் முன்வைக்கின்ற போதுதான் ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மஹிந்த இடையேயான வேறுபாடு – ராஜபக்ஷக்கள் இடையேயான முரணிலை – அம்பலமாகும்.

அதுவரை அனைத்து ராஜபக்ஷக்கள் உட்பட பொதுஜன பெரமுனவினர், சு.கவினர் எல்லோருமே ஒரே குரலில் 19 ஆவது திருத்தத்தை நீக்குகின்றமை குறித்து மட்டும் 'கோரஸாக' குரல் எழுப்பிக் கொண்டேயிருப்பர்.

அந்த இடத்துக்கு மாற்று என்ன என்பதுதான் இந்த விடயத்தின் ஆழத்தை – அதில் புதைந்து கிடக்கும் சிக்கலை – வெளிப்படுத்தும் என்பது திண்ணம்.

இந்தப் பொதுத்தேர்தலில் அரமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்குவதற்கும் அரசமைப்பில் மாற்றங்களைச் செய்வதற்கும் மக்களின் ஆணையைக் கோரப்போவதாகப் பொதுஜன பெரமுன தரப்பு அறிவிப்புக்களை விடுத்து வருகின்றது.

அப்படி முற்கூட்டியே பொதுத் தேர்தல் மூலம் மக்கள் ஆணையைப் பெற்று, அதன் மூலம் அரசமைப்பைத் திருத்துவது – அல்லது மாற்றுவது – அல்லது புதிதாக்குவது – சரியான நடைமுறைதான்.

ஆனால், அதற்கான ஆணை மக்களிடமிருந்து பொத்தம் பொதுவாகப் பெறுவதாக இருக்கக் கூடாது.

தாம் கொண்டு வர உத்தேசித்திருக்கும் புதிய அரசமைப்பின் அல்லது அரசமைப்பு மாற்றங்களின் உத்தேச நோக்கங்கள், வடிவங்கள், பண்பியல்புகள், தகைமைகள் பற்றி எல்லாம் கொள்கை மற்றும் கோட்பாட்டியல் ரீதியான அம்சங்களை முற்கூட்டியே மக்கள் முன் சமர்ப்பித்து, அதனடிப்படையில் மக்கள் ஆணை பெற்று, அதனை முன்னெடுப்பதே சரியான ஜனநாயக நடைமுறையாக இருக்கமுடியும். பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாண்மைத்துவத்தை – பெரும்பான்மை வாதத்தை – மட்டுமே நம்பி, மூலதனமாக்கி, அரசியல் செய்யும் ராஜபக்ஷக்கள் இந்த வரன்முறைக்கு அடங்கி நேர்மையாகச் செயற்படுவர் என்பது துர்லபமே.

# கிளிநொச்சி அரச அதிபராக மீண்டும் ரூபவதி நியமனம்





கொழும்பு, ஜன. 28

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் புதிய அரச அதிபர் மற்றும் மேலதிக அரச அதிபர்கள் கடமைகளை பொறுப்பேற்றனர்.

நேற்றுத் திங்கட்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் புதிய அரச அதிபராக திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

மீள்குடியேற்றம் முதல் 2015ஆம் ஆண்டு வரை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராகச் செயற்பட்ட அவர் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றி வந்த நிலையில் மீண்டும் நேற்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதன்போது இதுவரை பதில் அரச அதிபராக கடமையாற்றிய எஸ். சத்தியசீலன் புதிய அரச அதிபரிடம் பொறுப்புக்களை ஒப்படைத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் மற்றும் அத்தியாவசிய விடயங்கள் தொடர்பாக தான் நீண்ட கவனம் செலுத்தி, மக்களுக்கு வேண்டிய சகல விடயங்களையும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாக அரச அதிபர் இதன்போது தெரிவித்தார்.

விடுபட்டுள்ள அபிவிருத்திப் பணிகளையும், குறைநிலையில் காணப்படும் விடயங்களையும் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குத் தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்வேன் எனவும், அதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாணத் தொழிற்துறைத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராகவும், தேசிய அருங்கலைகள் பேரவையின் வடக்கு மாகாண ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராகவும் செயற்பட்ட கனகராஜா சிறிமோகனன் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபராகத் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இந்த இருவரையும் வரவேற்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது மாவட்ட அரச அதிபர் மற்றும் மேலதிக அரச அதிபர் ஆகியோர் உத்தியோகபூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

தனது பொறுப்புக்களைக் கையளித்த கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபராகச் செயற்பட்ட எஸ்.சத்தியசீலன் இன்று திறைசேரியில் தனது கடமைகளை பொறுப்பேற்க உள்ளமை குறிப்பிடதக்கது. (ஐ)

# வவுனியா அரச அதிபர் கடமைகளை ஏற்றார்



வவுனியா, ஜன. 28

வவுனியா மாவட்டத்தின் புதிய அரச அதிபராக அனுராதபுரத்தைச் சேர்ந்த எஸ்.எம். சமன் பந்துலசேன நேற்றுத் திங்கட்கிழமை பதவியேற்றுள்ளார்.

இதுவரை வவுனியா அரச அதிபராக இருந்த ஐ.எம். ஹனீபா பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் நிலையில், அனுராதபுர மாவட்டத்தின் உதவி அரச அதிபராகவும் பின்னர் வட மத்திய மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராகவும் இருந்த எஸ்.எம்.சமன் பந்துலசேன, புதிய அரச அதிபராக பதவியேற்றுள்ளார்.

தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வுகளில் நான்கு மதங்களையும் சேர்ந்த மதகுருமார் ஆசிகளை வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து புதிய அரச அதிபர் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆவணங்களில் கையொப்பமிட்டு ஆரம்பித்திருந்தார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# கட்சித் தலைமை பிரச்சினைக்கு இந்த வாரத்துக்குள் தீர்வு கிட்டும்

## ரவி கருணாநாயக்க நம்பிக்கை



கொழும்பு, ஜன. 28

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பிரச்சினைக்கு இந்த வாரத்துக்குள் தீர்வு கிட்டும் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மோதறைப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர், அரசியல் கட்சி என்ற ரீதியில் ஐ.தே.க. எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு தயாராக இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

தற்போது நாட்டின் பொருளாதாரம் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிவித்த ரவி கருணாநாயக்க, இது அண்மையில் இடம்பெற்ற விடயம் இல்லை எனவும் கூறினார்.

நாட்டின் பொருளாதாரத்தைச் சக்திமிக்கதாக மாற்ற முயற்சித்தபோதும் அது வீழ்ச்சியடைந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

**நாளை** 29.01.2020 - புதன்கிழமை

நட்சத்திரம்: பூரட்டாதி மு.ப 11.42 வரை
திதி : சதுர்த்தி மு.ப 10.05 வரை
இராகுகாலம் : 12.36 – 2.06
சுப நேரம் : 5.06 – 6.36

# புதிய கூட்டணி நிச்சயம் மலரும்

## சஜித் திட்டவட்டம்



கொழும்பு, ஜன. 28

புதிய கூட்டணி அமைத்துக் கொண்டு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை வெற்றி கொள்வோம். அதற்குத் தலைமைத்துவம் வழங்க நான் தயாராக இருக்கிறேன். அனைவரையும் இணைத்துக்கொண்டே எமது பயணம் அமையவேண்டும். ஒற்றுமையே எமது பலம். அது பெயரளவில் இருக்க முடியாது. டீல் காரர்களுடன் எமது பயணத்தை மேற்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

உள்ளூராட்சி மனற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களை சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் கொழும்பு கண்காட்சி மண்டபத்தில் சந்தித்தார். இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் அடைந்த பின்னடைவால் நாம் ஒருபோதும் சோர்வடையக் கூடாது. பல்வேறு நெருக்கடிக்கு மத்தியிலேயே நான் ஜனாதிபதி வேட்பாளரானேன். என்றாலும் எனது வேலைத்திட்டங்களை ஏற்றுக்கொண்டு 55 இலட்சம் மக்கள் எமக்கு வாக்களித்தனர். அவர்களை யாரும் கைவிட்டு விட முடியாது. அதேபோன்று பல்வேறு பொய்ப்பிரசாரங்களைக் கண்டு எமக்கெதிராக வாக்களித்த மக்கள் தற்போது உண்மையை உணரத் தொடங்கியுள்ளனர். அதனால் விட்ட தவறுகளை திருத்திக் கொண்டு, பொதுத் தேர்தலை நோக்கி நாம் முன்னேற வேண்டும்

அனைத்து முற்போக்கு சக்திகளையும் கூட்டிணைத்துக் கொண்டு புதிய கூட்டணி அமைத்து நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியடைவோம். அதற்காகக் கிராம மட்டத்திலிருந்து நீங்கள் சக்தி பெறவேண்டும். பொதுத் தேர்தலில் புதிய மாற்றுத் திட்டத்தை ஏற்படுத்த நாம் தயார். அதற்காக யாரையும் ஒதுக்கமாட்டோம். அனைவரையும் இணைத்துக் கொண்டே செல்ல வேண்டும். புதிய கூட்டணிக்கு தலைமை தாங்க நான் தயார். ஒற்றுமையே எமது பலம். ஒற்றுமை பெயரளவில் இருக்க முடியாது. அதேபோன்று எமது எதிர்த்தரப்புடன் டீல் போட்டுக் கொண்டு செயற்படுபவர்களுடன் இந்தப் பயணத்தை மேற்கொள்ள முடியாது. டீல் அரசியல் கட்சிக்கும் நல்லதில்லை. நாட்டுக்கும் நல்லதில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரத்துக்காக நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் சென்றிருந்தேன். அதேபோல நன்றி செலுத்த தற்போதும் பயணித்துக் கொண்டிருக்கிறேன். நாங்கள் செல்லும் கிராமங்களில் மக்கள் புதிய இலக்கை நோக்கி செல்லத் தயாராகவே இருக்கிறார்கள். அதற்காக விட்ட தவறுகளைத் திருத்திக்கொண்டு வருமாறே எம்மிடம் சொல்கிறார்கள்.

புதிய அரசு பதவியேற்றதும் எமது தரப்பினர் அரசியல் பழிவாங்கலிற்கு உள்ளாகி வருகிறார்கள். பலர் தொழிலை இழந்துள்ளனர். சிலர் தூரப் பிரதேசங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டியதும், அரசியல் பழிவாங்கலுக்கு இலக்கானவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதே எமது முதற்பணியாக இருக்கும்.

ஐ.தே.க மற்றும் கூட்டணியின் ஒற்றுமை அதன் உறுப்பினர்களுக்குப் பயனுள்ள முடிவுகளைக் கொண்டு வர வேண்டும்.

அரசியல் எதிரிகளுடன் பல்வேறு ஒப்பந்தங்களில் ஈடுபடுபவர்களிடமிருந்து இந்த கூட்டணி விடுபடவேண்டும். மேலும், பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் கட்சி மற்றும் அரசுக்கு வரும்போது முடிவெடுக்கும் பணியில் பங்கேற்க அனுமதிக்கப்படும் ஒரு வழிமுறை இருக்கவேண்டும். நல்ல தகவல்கள் அடிமட்ட மட்டத்திலிருந்து மேலே செல்கின்றன. எனவே ஒரு பயனுள்ள தகவல் பாயும் முறை இருக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஐ.தே.கவோ, கூட்டணியோ யாருடனும் ஒப்பந்தம் செய்யவில்லை. ஒரு பௌத்த தேசம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதில் விவாதம் இல்லை. ஆனால்‘எல்லா மனிதர்களும் மகிழ்ச்சியாகவும் நன்றாகவும் இருக்கட்டும்’என்று கற்பிக்கும் புத்தரின் பிரசங்கத்தைக் கடைபிடிக்க வேண்டும். பௌத்தம் முன்னுரிமையளிக்கப்பட்டாலும், ஏனைய மதங்கள் தமக்கான சுதந்திரத்துடன் செயற்படும்.

கட்சி அல்லது புதிய கூட்டணி ஒரு தனிநபரின் சொத்தாக மாறக்கூடாது, மாறாக அவர்களை ஆதரிக்கும் அனைவருக்கும் ஒரு சொத்தாக மாற வேண்டும் – என்றார்.

பின்னர், புதிய கூட்டணிக்குத் தான் தலைமை தாங்குவதை அங்கீகரிக்கும் உறுப்பினர்களை கைகளை உயர்த்தி ஆதரவு தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். கூட்டத்திலிருந்தவர்கள் கைகளை உயர்த்தினர்.

எல்லோரும் சுதந்திரமாக தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியதால் இது ஜனநாயகம். நாங்கள் எந்த முன் திட்டத்தையும் செய்யவில்லை அல்லது சிறிகொத்தாவைச் சேர்ந்த எவரும் இந்த நபர்களைக் கைகளை உயர்த்தவோ அல்லது கூச்சலிடவோ கேட்கவில்லை. இருப்பினும், கடந்த காலங்களில் இதுபோன்ற அனுபவங்களை நான் பெற்றிருக்கிறேன் – என்றார். (ஐ)

# கொழும்பு துறைமுகத்தில் பிலிப்பைன்ஸ் கப்பல்கள்



கொழும்பு, ஜன. 28

பிலிப்பைன்ஸ் நாட்டு கடற்படைக்குச் சொந்தமான இரண்டு கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

ரமோன் அல்கராஸ் மற்றும் டவோ டெல்சூர் ஆகிய இரண்டு கப்பல்களே இவ்வாறு கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இந்தக் கப்பல்களில் வருகை தந்துள்ள கட்டளைத்த தளபதி உள்ளிட்ட குழுவினர், தன்னார்வக் கடற்படைத் தலைமையகத்தின் தளபதி ரியர் அட்மிரல் சுமித் வீரசிங்கவுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் நாளை வரை தங்கியிருக்கவுள்ள இந்தக் குழுவினர், கடற்படையினர் ஏற்பாடு செய்துள்ள விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்வுகளிலும் கலந்துக் கொள்ளவுள்ளனர். (ஐ)

# யாழ்.ஒருங்கிணைப்புக் கூட்டம் வெள்ளியன்று!

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் என்று மாவட்ட செயலர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கூட்டத்துக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்டோர் அழைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட செயலர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# குடிவரவு, குடியகல்வு திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் மாற்றம்

கொழும்பு, ஜன. 28

குடிவரவு குடியகல்வு திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் இருந்த குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.2

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**வவுனியா பிரதேசத்தில் -**

மதவுவைத்தகுளம் கிராமம், அவுசதப்பிட்டிய கிராமம், மகாறம்பைக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# இந்தியாவில் மனித சங்கிலிப் போராட்டங்கள்









இந்திய மத்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை மேற்குவங்கம், கேரளா மற்றும் எதிர்கட்சிகள் தாங்கள் ஆளும் மாநிலத்தில் அமல்படுத்த மாட்டோம் என அடம் பிடித்து வருகின்றன. மேற்கு வங்க முதல்வர் மம்தா வீதிக்கு வந்து போராட்டம் நடத்தி வருகிறார். பினராயி விஜயன் முதல்வராக உள்ள கேரள அரசு, சிறப்பு சட்டசபையைக் கூட்டி இச்சட்டத்தை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியது. மேலும் உச்ச நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர்ந்து பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து மனித சங்கிலி போராட்டம் நடந்தது.காசர் கோட்டிலிருந்து கலியக்காவிளை வரை 620.கி.மீ. தூரத்துக்கு நடந்த இந்த மனித சங்கிலி போராட்டத்தில் முதல்வர் பினராயி விஜயன் உட்பட 60 லட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்றனர். இதே போல மேற்கு வங்க மாநிலம் கோல்கட்டாவிலும் குடியுரிமை திருத்த சட்டம் மற்றும் தேசிய குடிமக்கள் பதிவேடு திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மனித சங்கிலி போராட்டம் நடந்தது. 11 கி.மீ.க்கு போராட்டக்காரர்கள் கைகோர்த்து மனிதச் சங்கிலி அமைத்தனர்

## கொரனோ வைரஸின் தொற்று இந்தியாவில் இதுவரை இல்லை

இந்தியாவில் இதுவரை ஒருவருக்குக் கூட கொரனோ வைரஸ் தொற்று இல்லை என வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

சீனாவில் இருந்து 137 விமானங்கள் மூலம் வந்த 30 ஆயிரம் பயணிகளிடம் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நேற்று ஒரே நாளில் இந்தியா வந்த 4 ஆயிரத்து 359 பயணிகளிடம் மருத்துவப் பரிசோதனை செய்ததில் யாருக்கும் கொரனோ வைரஸ் பாதிப்பு இல்லை என மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வரதன் தெரிவித்துள்ளார்.

வுஹான் நகரில் இந்தியர்கள் யாருக்கும் வைரஸ் பரவவில்லை என்று சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இருப்பினும் அந்நாட்டு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இந்திய மாணவர்களை வெளியேற்றுவதற்கான முயற்சியில் சீனாவில் உள்ள தூதரகம் ஈடுபட்டுள்ளது. வுகானில் உள்ள மாணவர்கள் வெளியிடங்களுக்கு செல்ல வேண்டாம் என இந்தியத் தூதரக அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

## நீர்மூழ்கியில் இருந்து ஐயாயிரம் கி.மீ. தூர இலக்கை தாக்கும் ஏவுகணையை உருவாக்குகின்றது இந்தியா!

புதுடில்லி,ஜன.27

நீர்மூழ்கி கப்பலில் இருந்து ஐயாயிரம் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இலக்கை தாக்கும் ஏவுகணையை உருவாக்கச்இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டி.ஆர்.டி.ஓ) திட்டமிட்டுள்ளது.

இந்தியாவிடம் தற்போது உள்ள ஏவுகணைகளில், அக்னி - 5 மட்டும் தரையில் இருந்து ஐயாயிரம் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கும் வல்லமை கொண்டது. நீர்மூழ்கி கப்பலில் இருந்து தாக்கும் ஏவுகணைகளில் அதிகபட்சம் கே - 4 மட்டும் 3,500 கி.மீ. தூரம் சென்று தாக்கும்.

விசாகப்பட்டினத்தில் கிழக்கு கடற்பரப்பில் நீருக்கடியில் இரண்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. தற்போது, ஐ.என்.எஸ் அரிஹந்த் பி - 05 அணு ஏவுகணையை 750 கி.மீ. தூரத்துடன் கொண்டு செல்கிறது.

இதேபோல், நீர்மூழ்கி கப்பலில் இருந்து ஐயாயிரம் கிலோ மீற்றர. தொலைவில் உள்ள இலக்கை அழிக்க கே - வரிசையில் புதிதாக ஓர் ஏவுகணையை உருவாக்க பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு டி.ஆர்.டி.ஓ திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா கண்டங்களில் உள்ள நாடுகள் மற்றும் தென்சீனக் கடல் பகுதி உள்ளிட்ட இந்தோ - பசிபிக்கில் உள்ள நாடுகளில் தாக்குதல் நடத்த முடியும்.

இது குறித்து மூத்த அதிகாரிகள் தெரிவிக்கையில், இந்த ஏவுகணையை உருவாக்கும் திறன் எங்களிடம் இருந்தாலும், இதைப்பற்றி முடிவெடுப்பது அரசுதான். இதுவரையில் இதற்கான அனுமதி கிடைக்கவில்லை - என்றனர்.

## மழைநீர் சேகரிப்புக்கான சாதனமாக தமிழ்நாட்டில் ஆழ்துளைக் கிணறுகள்

### பாராட்டுகின்றார் பிரதமர் மோடி



தமிழ்நாட்டில் ஆழ்துளைக் கிணற்றை, மழைநீர் சேகரிப்புக்கான சாதனமாக பயன்படுத்தப்படுவதை, மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பாராட்டினார்.

'மன்கீபாத்' எனப்படும் மனதின் குரல் நிகழ்ச்சி மூலம் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிறன்று வானொலியில் பிரதமர் மோடி உரைநிகழ்த்தி வருகிறார். இம்முறை குடியரசு தின கொண்டாட்டம் காரணமாக, காலை 11 மணிக்குப் பதிலாக, மாலை 6 மணிக்கு உரை நிகழ்த்தினார்.

கடந்த 2 வாரங்களுக்கு முன்பு நாட்டின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்பட்ட நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்த மோடி, பொங்கல் பண்டிகை மற்றும் திருவள்ளுவர் தினம் ஆகியவை குறித்து பகிர்ந்துகொண்டார்.

அசாமில் கேலோ இந்தியா விளையாட்டு போட்டி சிறப்பாக நடைபெற்றதாகக் கூறினார். இந்தப் போட்டியில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 6000 விளையாட்டு வீரர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள் என்றும் மிகவும் ஏழ்மையான மாணவர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி சாதனை நிகழ்த்தினர் எனவும் கூறினார். தமிழகத்தின் பீடி தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள யோகானந்தன் என்ற தொழிலாளியின் மகள், பூர்ணாஸ்ரீ பளு தூக்குதல் போட்டியில் தங்கம் வென்று அனைவரது இதயத்தையும் வெற்றி கொண்டார் என அவர் பெருமிதத்துடன் கூறினார்.

நீர்ப்பாதுகாப்பிற்காக, பல பரவலான முயற்சிகள் நாட்டின் அனைத்து இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையைச் சுட்டிக்காட்டிய மோடி, தமிழ்நாட்டில் ஆழ்துளைக் கிணறு மழைநீர் சேகரிப்புக்கான சாதனமாக பின்பற்றப்படுவதாகத் தெரிவித்து அதற்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டம், 21ஆம் நூற்றாண்டின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில், பாரதத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையாகும் என்றும், புதிய பாரதத்தின், ஒரு புதிய மைல்கல்லாக இது அமையும் என்றும் மோடி கூறினார்.

## தூங்கா நகரமானது மும்பை



மும்பை நகரம் நேற்றிரவு முதல் தூங்கா நகரமாகியது. விடிய விடிய மோல்கள், திரையரங்குகள், உணவகங்கள், வர்த்தக நிறுவனங்கள், கடைகளைத் திறக்கலாம் என்று மாநில அரசு அனுமதியளித்துள்ளது.

நாரிமன் பொயின்ட், காலா கோடா, பாந்த்ரா குர்லா, வணிக வளாகம் ஆகிய மூன்று இடங்களில் இரவுநேரத்திலும் வர்த்தக நிறுவனங்கள், உணவகங்கள்திறந்திருக்கும். சுற்றுலாவையும் வேலைவாய்ப்பையும் அதிகரிக்கும் இலக்குடன் இத்திட்டம் நேற்று அமலுக்கு வந்தது.

கடற்கரைகள் அமைந்துள்ள ஜுஹூ, சவுபாட்டி, வோர்லி உள்ளிட்ட இடங்களிலும் பாந்த்ரா குர்லா வணிக வளாகம், நாரிமன் பாயின்ட் உள்ளிட்ட இடங்களிலும் தலா 6 உணவு வாகனங்கள் நிறுத்த அனுமதியளிக்கப்பட்டுள் ளது.

மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் சேவைகளை வழங்கவும் கண்காணிப்பு கமராக் களைப் பொருத்தவும் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளைச் சமாளிக்க பொலிஸார் தயார்நிலையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

# இரட்டை இயந்திரம் கொண்ட உலகின் மிகப்பெரிய விமானம்

வொஷிங்டன்,ஜன.28

இரட்டை இயந்திரம் கொண்ட உலகின் மிகப்பெரிய விமானத்தின் சோதனை ஓட்டம் வெற்றிபெற்றது.

425 பேர் பயணிக்கக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள இவ்விமானம், தொடர்ந்து 7,600 கடல் மைல் தொலைவு பறக்கக்கூடியதாகும்.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல விமான தயாரிப்பு நிறுவனமான 'போயிங்' உலகிலேயே மிகப்பெரிய இரட்டை இயந்திர விமானத்தைத். தயாரித்துள்ளது. அந்த விமானம் 'போயிங் 777 எக்ஸ்' என்று அழைக்கப்படுகிறது. இந்த விமானத்தின் சோதனை ஓட்டம் மோசமான வானிலை காரணமாக 2 முறை ஒத்திவைக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் சியாட்டில் நகரில் வெற்றிகரமாக நடந்தது.

அந்த நகரில் உள்ள பெயின் ஓடுதளத்தில் இருந்து புறப்பட்ட விமானம் 4 மணி நேர பயணத்துக்கு பிறகு பத்திரமாக தரையிறங்கியது. இதன் மூலம் 'போயிங்



777 எக்ஸ்' விமானம் முதல் சோதனை ஓட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தது.

இந்தவிமானம்அடுத்தஆண்டு ஐக்கிய அரபு அமீரகத்தில் தனது சேவையை தொடங்கும் எனவும், அதற்கு முன் னதாக மேலும் பல சோதனைகளுக்குஉட்படுத்தப்படும் எனவும் போயிங் நிறுவனம் தெரிவித் துள்ளது.

கடந்த ஆண்டு போயிங் 737 மேக்ஸ் விமானங்கள் அடுத்தடுத்து விபத்துக்குள்ளானமையில் 346 பேர் பலியாகினர். இதனால் போயிங் நிறுவனத்தின் மீதான நம்பகத்தன்மை பெரிதும் குறைந்தது. இதனால் நெருக்கடியை சந்தித்து வந்த அந்த நிறுவனத்துக்கு இந்த சோதனை ஓட்டத்தின் வெற்றி நம்பிக்கை அளிப்பதாக அமைந்துள்ளது.

# கொரோனா வைரஸுக்கு இதுவரை 80 பேர் பலி!



சீனாவின் வூஹான் நகரில் பரவியுள்ள கொரோனா வைரஸுக்குப் பலியானோர் எண்ணிக்கை 80 ஆக அதிகரித்துள்ளது. இரண்டாயிரத்து 700க்கும் மேற்பட்டோருக்கு இந்நோயின் பாதிப்பு இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. அமெரிக்காவில் 5 பேருக்கு இந்நோய்க்கூறு பரவியதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட ஏழு நாடுகளுக்கு கொரோனா வைரஸ் பரவிஇருப்பதையடுத்து பல்வேறு விமான நிலையங்களில் மருத்துவ சோதனை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. உலகின் பல்வேறு நாடுகளில் இந்த வைரஸ் குறித்த பதற்றம் பரவி வருகிறது.

வூஹானில் உள்ள அமெரிக்கர்களை சான்பிரான்சிஸ்கோவுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை சீன அரசு தொடங்கியுள்ளது. இதனால் இந்திய மாணவர்களும் நாடு திரும்பும் வாய்ப்பு உருவாகியுள்ளது. மேலும் நோய் பரவாமல் தடுக்க சீனாவில் இருந்து வெளியிடங்களுக்கு விலங்குகள், இறைச்சி போன்றவற்றை வர்த்தகம் செய்வதற்கும் சீன அரசு தடை அறிவித்துள்ளது.

# உயிர் ஆயுதங்கள் ஆய்வகத்திலிருந்தே வெளியே வந்ததா கொரோனா வைரஸ்?

## இஸ்ரேல் விஞ்ஞானி பரபரப்புக் குற்றச்சாட்டு

சீனாவில் பலரை உயிர்ப் பலி வாங்கிவரும்கொரோனாவைரஸ், அந்நாட்டின் உயிர் ஆயுதங்கள்(பயோ – வெப்பன்) தயாரிக்கும் ஆய்வு கூடங்களிலிருந்து உருவாகியிருக்கலாம்எனசெய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த வைரஸ் எவ்வாறு பரவியது என பல்வேறு ஊகங்கள் வெளியாகிவரும் நிலையில், உயிர் ஆயுதங்கள் ஆய்வு கூடம் மூலமாகப் பரவியிருக்கும் என இஸ்ரேல் உயிரியல் விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆங்கில நாளிதலான'திவாஷிங்டன்டைம்ஸ்'க்கு அவர் அளித்த பேட்டியில், 'சீனாவின் வுஹான் நகரில் தான் முதலில்கொரோனாவைரஸ்கண்டறியப்பட்டது. அங்கு தான், உயிர் –ஆயுதங்கள்உருவாக்கும்ஆய்வுக்கூடத்தை, சீனா உருவாக்கி இருந்தது. இங்கு ஆபத்தான கிருமிகள் மட்டுமே ஆய்வு செய்யப்படும். இங்கிருந்து தான் கொரோனா பரவியிருக்கும்' – அவர் கூறினார். இவரது கூற்றை உயிர் ஆயுதங்கள் குறித்து அறிந்த பலரும் ஆமோதித்துள்ளனர்.

ஆனால் இக்குற்றச்சாட்டை சீனா மறுத்துள்ளது. 'வுஹான் இறைச்சி சந்தையிலிருந்துதான் கொரோனா வைரஸ் பரவியிருக்கும்; உயிர் ஆயுதங்கள் ஆய்வு கூடங்களிலிருந்து இந்த வைரஸ் உருவானதாக அமெரிக்காதான் விம பிரசாரம் செய்து வருகிறது' என சீனா தெரிவித்துள்ளது.

# ஈராக்கில் அரசுக்கு எதிராக பல்வேறு பகுதிகளில் கலவரம்



ஈராக்கின் பல இடங்களில் அரசுக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களில் பெரும் கலவரம் மூண்டது.

அரசமைப்பு மற்றும் தேர்தல் முறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, ஈராக்கின் பல்வேறு பகுதிகளில், அரசுக்கு எதிராகத் தொடர்ந்து போராட்டம் நடந்து வருகிறது.

இந்தநிலையில், பாக்தாத் மற்றும் நஸ்ஸிரியாவில் போராட்டம் நடத்திய ஆயிரக்கணக்கானோர், டயர்களை எரித்தும், கோஷமிட்டும் கலவரத்தில் ஈடுபட்டனர். அவர்கள் மீது பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசியமையுடன், துப்பாக்கிச்சூடும் நடத்தினர். இதில்,30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

# கொரோனா வைரஸ் பரவுவதனால் டிஸ்னிலாண்ட்,ஓசேன் பார்க் பூட்டு





கொரோனா வைரஸ் பாதிப்பின் எதிரொலியாக ஹொங்கொங்கில்உள்ளபிரபலபொழுது போக்கு பூங்காக்களான டிஸ்னிலாண்ட் மற்றும் ஓசேன் பார்க் ஆகியவை மூடப்பட்டுள்ளன.

சீனாவில் புத்தாண்டையொட்டி, 7 நாள்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதால், பொழுது போக்கு பூங்காக்களுக்குச் செல்ல மக்கள் பெரும் எண்ணிக்கையில் திட்டமிட்டிருந்தனர்.

இந்தநிலையில், வேகமாகப் பரவிவரும் கொரோனா வைரஸ் காரணமாக ஹொங்கொங்கில் இந்த இரு பெரும் பொழுது போக்குப் பூங்காக்கள் மூடப்பட்டுள்ளன.

# அமெரிக்காவில் 5 பேருக்கு கொரனோ வைரஸ் காய்ச்சல்

வொஷிங்டன்,ஜன.28

அமெரிக்காவில் 5 பேர் கொரோனா வைரஸ் தாக்குதலால்பாதிக்கப்பட்டிருக்கின்றமைகண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் இருந்து செல்லும் பயணிகள் மூலம் பல வெளிநாடுகளுக்கும் கொரோனா வைரஸ் பரவியுள்ளது. அமெரிக்காவில் உள்ள வொஷிங்டனில் 30 வயது நபருக்கு கொரோனா வைரஸ் தாக்குதல் இருப்பது கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்இனம் இரண்டாவதாக சிக்காக்கோ நகரில் 60 வயதுப் பெண்ணுக்கு வைரஸ் தாக்குதல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. கடந்த 13 ஆம் திகதி அவர் சீனாவில் இருந்து வந்தபோது நன்றாக இருந்தார். ஆனால் நாண்கு நாள்களுக்குப் பின்னர் பாதிப்புத் தெரியவந்ததும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அமெரிக்காவில் இதுவரை 5 பேர் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிக்கப்பட்டிருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க சுகாதார மையம் தகவல் வெளியிட்டுள்ளது. அவர்கள் 5 பேருக்கும் மருத்துவமனைகளில் தனி பிரிவுகள் அமைக்கப்பட்டு சிகிச்சைஅளிக்கப்பட்டுவருவதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனோ வைரஸால் பதறும் சீனா!

சீனாவை அச்சுறுத்தும் கொரோனோ வைரஸ் தாக்குதலால் முதன்முதலில் அந்த வைரஸ் கண்டுபிடிக்கப்பட்ட வுஹான் நகர் உள்ளிட்ட சீனாவின் 12 நகரங்களிலிருந்து பொதுமக்கள் வெளியேறவும் அந்த நகரங்களுக்குப் பயணிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்குதலால் சீனா அதிர்ந்துபோய்க் கிடக்கிறது. வைரஸ் தாக்குதலைக் கட்டுப்படுத்த அந்நாட்டு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஹூபேய் மாகாணத்தில் உள்ள வுஹான் நகரில் கடல் உயிரினங்கள் மற்றும் வனவிலங்குகள் விற்பனை செய்யும் சந்தைப் பகுதியில் கடந்த மாதம் கொரோனா வைரஸின் முதல் பாதிப்பு கண்டறியப்பட்டதாகத் தெரிகிறது. இந்த வைரஸ் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதனால், சீனா முழுவதும் வனவிலங்குகள் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும், அதன் இறைச்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டாம் என அந்நாட்டு அரசு அறிவுறுத்தியிருக்கிறது.

சீனாவின் ஹூபேய் மாகாணத்தில் உள்ள வுஹான் மற்றும் அதைச் சுற்றியுள்ள நகரங்களில் சுமார் 700 இந்திய மாணவர்கள் பயின்று வருவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்கள் சீன புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு ஒரு வாரத்துக்கு முன்பே அங்கிருந்து கிளம்பியிருக்கிறார்கள். அதேநேரம், அப்படி விடுமுறைக்காக அங்கிருந்து கிளம்பாத இந்திய மாணவர்கள் மற்றும் அங்கு தங்கியிருக்கும் இந்தியர்களைத் தாய்நாட்டுக்குக் கொண்டு வர மத்திய அரசு முயற்சி செய்யும் என்கிறார்கள்.

கொரோனோ வைரஸ் தாக்குதல் முதன்முதலாகக் கண்டறியப்பட்ட வுஹான் நகரம் உள்ளிட்ட சீனாவில் 12 நகரங்கள் சீல் வைக்கப்பட்டிருக்கின்றன. வைரஸ் தாக்குதல் பரவாமல் தடுக்க சீன அதிகாரிகள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர். சமீபத்திய கணக்கின்படி கொரோனோ வைரஸ் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 80ஐத் தொட்டிருக்கிறது. மேலும், வைரஸ் தாக்குதலால் 2,700 பேருக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 17 ஆண்டுகளுக்கு சார்ஸ் வைரஸால் பாதிக்கப்பட்டபோது பெய்ஜிங்கில் அதிவேகமாகப் பிரத்யேக மருத்துவமனையைச் சீனா கட்டியது. சார்ஸ் வைரஸ் தாக்குதலால் 800க்கும் மேற்பட்டோர் பலியாயினர். அதேபோன்றதொரு மருத்துவமனையை வுஹானிலும் ஒருவாரத்தில் கட்டிமுடிக்கத் திட்டமிட்டுள்ளது சீனா. இதற்கான வேலைகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ள நிலையில், பெப்ரவரி முதல்வாரத்தின் மத்தியில் வேலைகள் முடிந்து நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சீன மக்கள் வரும் 30ஆம் திகதி முதல் பிப்ரவரி 2ம் தேதி வரை புத்தாண்டுக் கொண்டாட தயாராகி வந்தனர். இந்தநிலையில் வைரஸ் அச்சுறுத்தலால், புத்தாண்டு விடுமுறையை சீன அரசு அதிகரித்திருக்கிறது.







வுஹான் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிக்கியிருக்கும் தங்கள் நாட்டவர்களை மீட்க மற்ற நாடுகள் முயன்றுவருகின்றன. இந்தநிலையில், அங்கிருந்து அமெரிக்காவைச் சேர்ந்தவர்களை வெளியேற்ற சீனா ஒப்புதல் அளித்திருக்கிறது. வுஹானில் இருக்கும் அமெரிக்கத் தூதரகம் விமானம் மூலம் தங்கள் நாடுகளைச் சேர்ந்தவர்களை தாய்நாட்டுக்குத் திரும்ப நடவடிக்கை எடுத்து வருகிறது. அதேபோல், ஜப்பானும் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருக்கிறது. ஜப்பானைச் சேர்ந்த சுமார் 500 பேர் ஹூபேய் மாகாணத்தில் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கொரோனோ வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் 98 சதவிகிதம் பேர் சீனாவில் வசிப்பவர்கள். உலக சுகா தார அமைப்பின் தரவுகளின்படி, சீனாவுக்கு வெளியே இந்த வைரஸால் 29 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் 26 பேர் வுஹான் நகர் வழியா கப் பயணித்தவர்கள். கொரோனோ வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள், அத னால் பாதிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குப் பின்னரே அதன் அறிகுறிகள் காட்டத் தொடங்கும் என்கிறார்கள் சீன மருத்துவர்கள். இதனால், இரண்டு வார இடைவெளியில் சீனாவின் ஹூபேய் மாகாணத்தில் பயணித்தவர்கள் தங்கள் நாட்டுக்குள் வர ஹாங்காங் அரசு தடை விதித்திருக்கிறது.




சீனாவிலிருந்து இந்தியா திரும்புவர்களுக்கு சென்னை, மும்பை, டெல்லி உள்ளிட்ட 7 முக்கிய விமான நிலையங்களில் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ள மத்திய சுகாதாரத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. உடல் வெப்பநிலையைக் கண்டறியும் தெர்மல் இமேஜிங் தொழில் நுட்பம் மூலம் பல்வேறு நாடுகள் சீனாவிலிருந்து தங்கள் நாட் டுக்கு வரும் பயணிகளை ஸ்கேன் செய்த பிறகே அனுமதிக்கின்றன. உடல் வெப்பநிலை அதிகமாக இருக்கும்பட்சத்தில் அவர்கள் தனிமைப் படுத்தப்பட்டு வைரஸ் தாக்குதலில் பாதிக்கப்பட்டிருக்கிறாரா என்று சோதனை நடத்தப்படுகிறார்கள்.

பிரதமர் மோடி மற்றும் சீன அதிபர் ஜி ஜின்பிங் இடையிலான முதல் உச்சி மாநாடு, 2018ஆம் ஆண்டு ஏப்ரல் 27, 28 ஆகிய திகதிகளில் சீனாவின் வுஹான் நகரில் நடந்தது குறிப்பிடத்தக்கது. அந்நாட்டின் ஹூபேய் மாகாணத்தில் உள்ள வுஹான் நகர், இந்த சந்திப்புக்குத் தேர்வு செய்யப்பட்டதற்கு ஒரு காரணம் இருந்தது. சீனப் பொருளாதாரத்தில் முக்கியமான இடத்தைப் பிடித்த நகர் இந்த வுஹான்.

ஹூபேய் மாகாணத்தின் தலைநகரான வுஹான் நகரை யாங்க்ட்ஸ் மற்றும் ஹான் (Yangtze and Han rivers) என இரு ஆறுகள் வளப்படுத்துகின்றன. தங்கள் நாட்டின் பொருளாதார முக்கியத்துவத்தை உணர்த்தவே, மோடி – ஜி ஜின்பிங் இடையிலான முதல் இன்ஃபார்மல் சந்திப்புக்கு அந்த நகரை சீனா தேர்வுசெய்திருந்தது. அந்த நகரம்தான் தற்போது கொரோனோ வைரஸ் தாக்குதலால் வெளி உலகிலிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

# புளொட் ஊடாகக் கூட்டமைப்புடன் இணைவு இட்டுக்கட்டப்பட்ட வதந்தி

## கூறுகின்றார் ஐங்கரநேசன்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பின் ஊடாகக் கூட்டமைப்பில் இணைந்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதாகச் சொல்லப்படுவது இட்டுக்கட்டப்பட்ட வதந்தியாகும் என தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் மாகாண அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக விக்னேஸ்வரன் தலைமையில் உருவாக்கப்படும் மாற்று அணியில் இணைந்து கொள்ளாமல் புளொட் அமைப்பினூடாகக் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடப் போவதாக வெளியாகிய செய்திகள் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், அந்தக் கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் ஆகியோருடன் தனிப்பட்ட ரீதியில் தொடர்புகளைக் கொண்டிருக்கிறேன்.

குறிப்பாக மாகாண சபையில் எனக்கேற்பட்ட நெருக்கடிகளின்போது என்னைப் பதவி விலக்குவது பொருத்தமானது அல்ல என்று முதலமைச்சரிடம்கூட பல தடவைகள் சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார். ஆனால் இந்தத் தொடர்புகள் யாவும் அரசியல் ரீதியானவை அல்ல. ஆனாலும் அந்தளவுக்கு எங்களுக்கிடையில் தொடர்புகள் இருக்கின்றன.

மற்றப்படி புளொட் ஊடாகக் கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கான வாய்ப்புக் கேட்டு சித்தார்த்தனுடன் நான் பேசினேன் என்றோ அல்லது அவர் கொழும்பில் இருப்பதால் வந்து பேசுவதாகச் சொன்னார் என்றோ சொல்வதிலே எவ்விதமான உண்மையும் இல்லை. ஆகவே இதுவெல்லாம் முற்று முழுதாக உள்நோக்கம் கருதி இட்டுக் கட்டப்பட்ட வதந்தியாகும்.

நான் ஏற்கனவே சொன்னமை போல முன்னாள் முதலமைச்சருடனான கூட்டணியில் நான் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் என்ற விடயத்தில் அரசியலில் கூட்டு எப்படி இருக்கவேண்டும் என்பது தொடர்பான எனது கருத்து நிலைப்பாட்டின்படியும் சாத்தியமற்றதாகவே கருதுகிறேன்.

அதிலும் மற்றப்படி அவருடன் எனக்கு எவ்விதமான தனிப்பட்ட முரண்பாடுகளும் இல்லை. அதே போன்றே அவருக்கும் என்னுடனான தனிப்பட்ட முரண்பாடுகள் எவையும் இல்லை. அரசியல் கடந்து இருவருக்கும் இடையிலான அன்பு சார்ந்த உறவு நீடிக்குமென்றே கருதுகின்றேன் – என்றார். (ஐ – 07)

## கொரோனா வைரஸ் தாக்கம்;

# 24 மணிநேர தொலைபேசி இலக்கத்தை அறிமுகம் செய்தது இலங்கைத் தூதரகம்

கொழும்பு, ஜன. 28

24 மணி நேர உடன் தொலைபேசி இலக்கம் ஒன்றை சீனாவில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிமுகம் செய்துள்ளது. இந்த தொலைபேசி இலக்கத்தினூடாக கொரோனா வைரஸ் தொடர்பாக சீனாவில் உள்ள இலங்கை மக்கள் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும். அதற்கமைய 0086 - 10 - 65321861/2 என்ற தொலைபேசி இலக்கத்தையே இலங்கை தூதரகம் அறிமுகம் செய்துள்ளது. சீனாவின் வுஹான் நகரத்தை தாக்கியுள்ள கொரோனா வைரஸ் காரணமாக இதுவரை 56 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 1,925 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த சீனா கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளது. சட்டவிரோதமாக வனவிலங்குகளை விற்பனை செய்து வந்த மத்திய சீன நகரமான வுஹானில் உள்ள கடல் உணவு சந்தையில் கடந்த ஆண்டு பிற்பகுதியில் உருவாகியிருக்கலாம் என நம்பப்படும் இந்த வைரஸ், பீய்ஜிங் மற்றும் ஷாங்காய் உள்ளிட்ட நகரங்களுக்கு பரவியுள்ளது.

இதேவேளை இந்த வைரஸ் சிங்கப்பூர், தாய்லாந்து, ஜப்பான், பிரான்ஸ், கனடா உள்ளிட்ட பிற நாடுகளுக்கும் பரவியுள்ளதுடன் இதனால் அந்நாடுகளில் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தவைரஸ் குறித்து முன்னதாகவே முன்னெச்சரிக்கை விடுத்திருந்த அமெரிக்காவின் ஜோன் ஹோப்கின்ஸ் வைத்திய ஆய்வு நிறுவனமானது, இவ் வைரஸ் காரணமாக 18 மாதங்களில் 6.5 கோடி மக்கள் உயிரிழப்பார்கள் என்று எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.

# 3 வயதுக் குழந்தையை அடித்து கொல்ல முயன்ற தந்தை கைது!

கொழும்பு, ஜன. 28

பலாங்கொடை நகரின் தொரவல பாலத்துக்கு அருகில் தனது 3 வயதுடைய குழந்தையை அடித்துத் துன்புறுத்திப் பாலத்தின் கீழ் தள்ளிவிட முயற்சித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க பலாங்கொடை பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கைதானவரின் மனைவி ஆறு மாதங்களின் முன்னர் வெளிநாட்டுக்குப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார். தந்தையின் பராமரிப்பில் பிள்ளைகள் வளர்ந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை தனது 3 வயது குழந்தையை சந்தேகநபர் அடித்துத் துன்புறுத்திய அந்தப் பகுதி மக்கள், உடனடியாக 119 பொலிஸ் அவசர இலக்கத்துக்குத் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சிறுமியை மீட்டதுடன், சந்தேகநபரின் மூத்த மகனான 9 வயதான சிறுவனையும் மீட்டனர்.

சந்தேகநபர் பலாங்கொடை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது இன்று வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

(ஐ)

# திரையரங்குகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஜன. 28

நாட்டின் திரையரங்குகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரசிகர்களை மீண்டும் ஈர்ப்பதே இதன் நோக்கமாகும் என தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி ஜயந்த தர்மதாச தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திரைப்படத்துறை எந்தவொரு நாட்டிலும் கலை ஊடகமாக வீழ்ச்சியடையவில்லை. எனவே, நாட்டில் திரைப்படத்துறை பின்னடைவைக் கண்டுள்ளது. இதனை மீண்டும் வழமை நிலைமைக்குக் கொண்டு வருவதற்கான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க முடியும் என்று முன்னணி திரைப்பட இயக்குனர் திஸ்ஸ லியனசூரிய தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், திரைப்படத்துறையை மேம்படுத்த அரசின் அனுசரணை தேவை என்றும் அவர் மேலும் கூறினார்.

(ஐ)

# எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தை சம்பந்தனுக்கு வழங்குவதில் சிக்கல்!

கொழும்பு, ஜன. 28

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு உத்தியோகபூர்வ இல்லத்தை வழங்குவதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் பொது நிர்வாக அமைச்சர் இந்த விவகாரத்தில் விளக்கம் கோரியமையால் தற்போது பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் முன்னாள் பிரதமர்களுக்கும் இதேபோன்ற வசதிகள் வழங்கப்பட வேண்டும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டியமையைத் தொடர்ந்து பொது நிர்வாக அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் இதுகுறித்து விளக்கம் கோரியுள்ளார் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஆனால் இரா.சம்பந்தனுக்கு உத்தியோகபூர்வ இல்லத்தை வழங்குவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை எனச் சபை முதல்வர் தினேஷ் குணவர்தன கடந்த நாடாளுமன்ற அமர்வின் போது தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சம்பந்தனுக்கு வீட்டை ஒதுக்கியதன் விளைவாக, தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஒரு வீட்டை ஒதுக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று பொது நிர்வாக அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எதிர்க்கட்சித் தலைவராக இல்லாவிட்டாலும் கடந்த 2017 முதல் உத்தியோகபூர்வ இல்லத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார். இதனை தொடர்ந்து அந்த இல்லத்தை மீண்டும் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)


northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# நியூஸிலாந்து அணியை பந்தாடுகின்றது இந்தியா

நியூஸிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது இருபதுக்கு இருபது போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

நியூஸிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணியானது நியூஸிலாந்துடன் 5 இருபதுக்கு -20, மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது.

இதில் கடந்த வெள்ளிக்கிழமை ஒக்லாந்தில் ஆரம்பமான இருபதுக்கு - 20 தொடரின் முதல் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஒக்லாந்தில் ஆரம்பான இரண்டாவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி நிர்ண யிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட் டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து 133 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி 17.3 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்து 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் கே.எல். ராகுல் 57 ஓட்டங்களையும், ஸரேயார்ஸ் ஐயர் 44 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக கே.எல். ராகுல் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரில் இந்திய அணி 2 - 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.




# மெல்பேர்ன் அணி அபார வெற்றி!



பிக்பேஷ் ரி - 20 தொடரின் 56ஆவது லீக் போட்டியில், மெல்பேர்ன் ரெனிகேட்ஸ் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

மெல்பேர்ன் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில், மெல்பேர்ன் ரெனிகேட்ஸ் அணியும், பிரிஸ்பேன் ஹீட் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பிரிஸ்பேன் ஹீட் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய பிரிஸ்பேன் ஹீட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 154 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மெட் ரென்ரோவ் 65 ஓட்டங்களையும், மார்னஸ் லபுஸ்சேகன் 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மெல்பேர்ன் ரெனிகேட்ஸ் அணியின் பந்துவீச்சில், வில் சுத்தர்லேண்ட் 3 விக்கெட்டுகளையும், சமீட் பட்டேல், கேமரூன் போய்ஸ், மொஹமட் நபி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 155 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மெல்பேர்ன் ரெனிகேட்ஸ் அணி, 19.2 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் மெல்பேர்ன் ரெனிகேட்ஸ் அணி 7 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஆரோன் பின்ஞ் 63 ஓட்டங்களையும், மொஹமட் நபி ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பிரிஸ்பேன் ஹீட் அணியின் பந்து வீச்சில், பென் கட்டிங் 2 விக்கெட்டுகளையும், முஜிப் உர் ரஹ்மான் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 49 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 2 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 63 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஆரோன் பின்ஞ் தெரிவு செய்யப்பட்டார்.

# பிரபல கூடைப்பந்து வீரர் ஹெலி விபத்தில் மரணம்

## 13 வயது மகளும் உயிரிழந்தார்

உலங்குவானூர்தி விபத்தில் சிக்கி பிரபல கூடைப்பந்து வீரர் கோபி ப்ரையண்ட் உயிரிழந்தார்.

அமெரிக்காவின் தேசிய கூடைப்பந்து கூட்டமைப்பின் முக்கிய வீரர் கோபி ப்ரையண்ட். கூடைப்பந்து விளையாட்டில் 20 ஆண்டுகளாக மாபெரும் ஆளுமையாக திகழ்ந்தவர். ஒலிம்பிக் போட்டிகளில் இரண்டு முறை தங்கப்பதக்கம் வென்றவர்.

நேற்று அதிகாலை கோபி ப்ரையண்ட் தனது 13 வயது மகள் ஜியானா உட்பட 8 பேருடன் தனியார் உலங்குவானூர்தி ஒன்றில் தவு சண்ட் ஆக்ஸ் என்னும் பகுதிக்குச் சென்று கொண்டிருந்தார்.

கடும் பனி மூட்டத்தின் நடுவே கலாபஸாஸ் என்னும் இடத்தில் உள்ள மலைப்பகுதியில் சென்றுகொண்டிருக்கும்போது உலங்குவானூர்தி திடீரென தீப்பிடித்துக் கொண்டது.

இதில் கோபி ப்ரையண்ட், அவரது 13 வயது மகள் ஜியானா, கூடைப் பந்துப் பயிற்சியாளர் கிரிஸ்டினா மாஸர் உள்ளிட்ட 9 பேரும் உடல் கருகி உயிரிழந்தனர்.

இதுகுறித்து லாஸ் ஏஞ்சல்ஸ் ஷெரிப் உலங்குவானூர்தியில் இருந்த 9 பேரும் இறந்துவிட்டனர் என்பதை உறுதி செய்துள்ளார்.

கோபி ப்ரையண்ட்டுக்கு வானெஸா என்ற மனைவியும் ஜியானா உட்பட 4 மகள்களும் உள்ளனர்.

கோபி ப்ரையண்ட்டின் திடீர் உயிரிழப்பு உலக கூடைப்பந்து ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இவரது உயிரிழப்புக்கு ஒபாமா, டொனால்டு ட்ரம்ப் உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



# ரசிகரை கெட்ட வார்த்தையில் திட்டி சர்ச்சையில் சிக்கிய வீரர்






கொழும்பு, ஜன. 28

ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள வாண்டரர்ஸில் தென்னாபிரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான நான்காவது மற்றும் இறுதி டெஸ்டின் முதல் நாள் ரசிகருடன் கோபமாக பேசியது கமராவில் சிக்கியதை அடுத்து பென் ஸ்டோக்ஸ் டுவிட்டரில் மன்னிப்பு கேட்டுள்ளார்.

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து ஆடி வருகிறது. 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்ற நிலையில், அடுத்த 2 போட்டிகளிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. இதையடுத்து 2 - 1 என இங்கிலாந்து அணி முன்னிலை வகித்துவரும் நிலையில், நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி 24 ஆம் திகதி தொடங்கியது.

இந்நிலையில் இந்தப் போட்டியில் களத்திற்கு வந்ததும் ஆட்டமிழந்து திரும்பிய பென் ஸ்டோக்ஸ், அவரை கிண்டலடித்த ரசிகர் ஒருவரை, பெவிலியனுக்குச் செல்லும் வழியில் படியில் நின்று கொண்டு, முடிந்தால் மைதானத்துக்கு வெளியே வந்து சொல்லுடா என்றவாறு கெட்ட வார்த்தையிலும் பேசினார். ஸ்டோக்ஸ் ரசிகரை திட்டியது, கமராவில் பதிவானதால், அதிவேகமாக வைரலானது.

இதையடுத்து தனது செயல்பாட்டிற்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கேட்டுள்ளார் பென் ஸ்டோக்ஸ். இருப்பினும் இவரின் மேற்படி செயற்பாட்டுக்காக ஐ.சி.சி இவரது ஊதியத் தொகையிலிருந்து 15 வீதத்தை அபராதமாக விதித்துள்ளது.

# பொதுத் தேர்தலில் மஹிந்த குருநாகலில் போட்டியிடுவார்

## ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்



கொழும்பு, ஜன. 28

நாட்டில் அடுத்து நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார் எனப் பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்வரும் பொதுத்தேர்தலுக்காக அனைத்துக் கட்சிகளும் தயாராகி வருகின்றமையை அந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களின் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது. (ஐ)

# யாழிலிருந்து கொழும்பு செல்லும் வாகனங்களில் விசேட சோதனை

## பாதுகாப்புத் தரப்பினர் அறிவிப்பு

வவுனியா, ஜன. 28

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் பஸ்கள் உள்ளிட்ட வாகனங்கள் அனைத்தும் விசேட சோதனைக்குட்படுத்தப்படுவதாக வவுனியா பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து இந்த சோதனை நடவடிக்கையை நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா புளியங்குளம், ஓமந்தை, நொச்சிமோட்டை மற்றும் இரட்டைப் பெரியகுளம் ஆகிய பகுதிகளில் வீதித் தடைகளை ஏற்படுத்தி இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் உள்ளிட்ட சட்டவிரோதப் பொருட்கள் கடத்தப்படுவதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக வவுனியா பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு நேற்று முன்தினம் இரவு மற்றும் நேற்று பகல் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 15 கிலோ பெறுமதியான கேரளக் கஞ்சாவைக் கடத்திய குற்றத்திற்காக அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப்பத்திரம் இன்றி கடத்தப்பட்ட தளபாடங்கள் செய்யப் பயன்படும் மரக் குற்றிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கேரளக் கஞ்சா மற்றும் மரக் குற்றிகள் கடத்தப்பட்ட மூன்று பஸ்களையும் பொலிஸார் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கைக்கு எடுத்து வரப்படும் சீன உணவுகள் பரிசோதனைக்கு

சீனாவில் இருந்து, இலங்கைக்கு எடுத்து வரப்படும் உணவுகளை விசேட பரிசோதனைக்குட்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

சீனாவில் பரவி வரும் கொரோனா வைரஸ் காரணமாக, அங்கு பலரும் உயிரிழந்து வருவதுடன், தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்றும் வருகின்றனர்.

இவ்வாறான நிலையிலேயே, சீனாவில் இருந்து இலங்கைக்கு எடுத்து வரப்படும் உணவுப் பொருள்கள் குறித்து விசேட பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை, கொரோனா வைரஸை கண்டறியும் நோக்கும் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய விசேட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ராஜபக்ஷாக்களுக்கு ஆதரவாக செயற்பட்டோரை விலக்குங்கள்

## சரத் பொன்சேகா கோரிக்கை



கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ராஜபக்ஷாக்களுடன் ஒப்பந்தம் செய்துக் கொண்டவர்களை இனங்கண்டு, சஜித் பிரேமதாஸ விலக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியில் தலைவர் தொடர்பாக நான் ஒன்றைக் கூறிக்கொள்கிறேன்.

கம்பஹா மாவட்டம் என்பது 18 லட்சம் வாக்குகளைக் கொண்ட ஒரு மாவட்டமாகும். இந்த மாவட்டத்துக்கு ஏதாவது பெரிதாகச் செய்யவேண்டும் என அவரிடம் அழாத குறையாகக் கேட்டிருந்தேன்.

ஆனால், அவர் அதனை மேற்கொள்ளவில்லை.

நாம் அடுத்தக்கட்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டுமெனில், திருடர்களை இணைத்துக் கொள்ளாமல் பயணிக்க வேண்டும்.

எமது தரப்பிலுள்ள சிலர் ராஜபக்ஷாக்களுடன் ஒப்பந்தம் செய்துக் கொண்டார்கள். இவ்வாறானவர்களை சஜித் பிரேமதாச இணங்கண்டு அவர்களை விலக்க வேண்டும்.

அப்படி செய்யாவிட்டால், மீண்டும் தோல்வியையே எம்மால் சந்திக்க நேரிடும் – என்றார். (ஐ)

# ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து நாங்கள் வெளியேறவேமாட்டோம்

## அடித்துக் கூறுகின்றார் மனோ கணேசன்



கொழும்பு, ஜன. 28

நாம் ஒருபோதும் ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து வெளியேறமாட்டோமென நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து வெளியேறுவீர்களான என எம்மிடம் சிலர் கேட்கிறார்கள்.

நாம் இந்தக் கூட்டணியை விட்டு வெளியேறப்போவதில்லை என்பதே எமது உறுதியான பதிலாகும்.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமைத்துவம் எமக்கு இன்று அவசியமாகிறது. இந்தக் கூட்டணியில் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயமாக இடம்பெற வேண்டும்.

எனவே, அந்தக் கட்சியிலிருக்கும் தலைமைத்துவப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வினை பெற்றுக் கொள்ளுங்கள் என கேட்டுக் கொள்கிறேன் – என்றார்.

# காற்றாலை ஊழியர் மீது மறவன்புலவில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 28

சாவகச்சேரி மறவன்புலவுப் பகுதியில், காற்றலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு வரும் நிலையில், அதில் கடமை புரியும் ஊழியர் அற்புதராசா நவநீதனின் வீடு புகுந்து, நேற்று முன் தினம் இரவு 11.00 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

30 பேர் கொண்ட இனம் தெரியாத குழு நடத்திய தாக்குதலில் அந்த ஊழியரின் மனைவி, பிள்ளைகள் இருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவம் குறித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியும், பொலிஸார் ஒரு மணி நேரம் கழித்தே அங்கு வருகை தந்தனர் எனத் தாக்குதலுக்கு உள்ளான ஊழியர் குறிப்பிட்டார்.

தாக்குதலுக்கு உள்ளான அற்புதராசா நவநீதன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளமையுடன், தாக்குதல் சம்பவம் தொடர்பில் பதிவு செய்த காட்சிகளையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். (ஐ)



# யாழ். பல்கலை வளாகத்தில் பௌத்த விகாரைக்கு கலசம்



கிளிநொச்சி, ஜன. 28

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக் கழக வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரைக்கான கலசம் வைக்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று திங்கட்கிழமை காலை 6.15 மணியளவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, பல்கலைக்கழக வளாகத்தில் நான்கு வணக்கஸ்தலங்கள் அமைப்பதற்கு தலா ஓர் ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டது.

எனினும் அந்த இடத்தில் ஏனைய வணக்கஸ்தலங்களை அமைப்பதற்கு சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு வணக்கஸ்தலங்களும் சம அளவு உயரத்தை கொண்டனவாக அமையவேண்டும் என்பது பல்கலைக்கழகத்தின் ஏற்பாடாகும். (ஐ)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

சசிகா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

தலைமைக் காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012

காரைநகர்
021 225 2454,
070 510 2484

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக
0212215472
0703013012

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.




90 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.01.2020இல் வெளியிடப்பெற்றது.